பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

11 12 2024 **WEDNESDAY** **7.15 PM.**

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் வர்த்தகத்தில் கடல்சார் துறை 95 சதவீதம் பங்களிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

2. உலகின் முன்னணி டிஜிட்டல் பொருளாதார நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்வதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. ரயில்வே சட்டத்திருத்த மசோதா மக்களவையில் இன்று நிறைவேறியது.

4. ரிசர்வ் வங்கியின் கவர்னராக திரு சஞ்சய் மல்ஹோத்ரா இன்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

5. ஒடிஷா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tasnim Mir** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*-- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>

நாட்டின் வர்த்தகத்தில் 95 சதவீதம் பங்களிப்பை கடல்சார் துறை வழங்கி வருவதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற இந்திய கடல்சார் பாரம்பரிய மாநாட்டில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

கடல்சார் வணிகத்தை மேம்படுத்தும் வகையிலும், அத்துறையில் நிலையான வளர்ச்சியை உருவாக்கும் வகையிலும் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

நாட்டின் கடல்சார் பாரம்பரியத்தை கௌரவிக்கும் வகையில் இம்மாநாடு அமையும் என்று திரு ஜெக்தீப் தங்கர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால், கடல்சார் துறையின் தற்போதைய செயல்பாடுகள் மற்றும் அதன் எதிர்காலத்தை வடிவமைக்கும் வகையில் குஜராத்தில் உள்ள தேசிய கடல்சார் பாரம்பரிய வளாகம் உருவாக்கப்பட்டு வருவதாக கூறினார்.

கடல்சார் பாரம்பரியமானது நமது நாட்டை மட்டுமல்லாமல், உலக வரலாற்றையும் வடிவமைத்திருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>

உலகின் முன்னணி டிஜிட்டல் பொருளாதார நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்வதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் இறுதிப்போட்டியாளர்கள் உடன் காணொலி வாயிலாக அவர் இன்று உரையாடினார்.

நாடு மிகப்பெரிய அளவிலான டிஜிட்டல் பிணைப்பை கொண்டிருக்கும் தற்போதைய சூழலில், சைபர் குற்றங்களின் அச்சுறுத்தல் பெருகி வருவதாக அவர் கூறினார்.

இளம் கண்டுபிடிப்பாளர்கள் அதற்கு சரியான தீர்வை கண்டறிந்து, நாட்டின் எதிர்காலத்தை மேம்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

நாடு புதிய சவால்களை எதிர்கொள்ளும் நேரத்தில் அசாதாரணமான தீர்வுகளுடன் இளம் கண்டுபிடிப்பாளர்கள் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே இப்போட்டியின்மூலம் பெறப்பட்ட தீர்வுகளை பல்வேறு அரசுத்துறைகள் வெற்றிகரமாக செயல்படுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

நாடு முழுவதும் பல்வேறு துறைகளில் ட்ரோன்கள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக மக்களவை இன்று பலமுறை ஒத்திவைக்கப்பட்டது.

முன்னதாக, இன்று காலை அவை கூடியதும், கேள்விநேரம் எந்தவித இடையூறுகளும் இன்றி சுமூகமாக நடைபெற்றது.

அதையடுத்து, மணிப்பூர் விவகாரம் குறித்து காங்கிரஸ் உறுப்பினர் திரு கௌரவ் கோகாய் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்து பேசிய மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல், மணிப்பூர் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதில் அரசு முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

மேலும், அமெரிக்காவை சேர்ந்த ஒரு அறக்கட்டளையுடன் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு இருக்கும் தொடர்பு குறித்து அவர் கேள்வி எழுப்பினார்.

இதையடுத்து, ஏற்பட்ட அமளி காரணமாக மக்களவை இரண்டு மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியபோது, ரயில்வே சட்டத்திருத்த மசோதா, பேரிடர் மேலாண்மை திருத்த மசோதா ஆகியவை குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டன.

இதுதொடர்பான விவாதத்தின்போது, அவை உறுப்பினர்கள் தனிப்பட்ட ரீதியலான கருத்துக்களை தெரிவிப்பதை தவிர்க்குமாறு மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா கேட்டுக்கொண்டார்.

அதன்பிறகும், அமளி நிலவியதால், இரண்டு முறை அவை ஒத்திவைக்கப்பட்டது.

பின்னர் ஐந்து மணியளவில் மக்களவை நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

மாநிலங்களவை இன்று காலை கூடியபோது, பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதிக்கும் வகையில் ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டுவர வேண்டும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

இதனை அவைத்தலைவர் நிராகரித்தார்.

அதையடுத்து பேசிய நாடாளுமன்ற விவகாரங்கள்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு, எதிர்க்கட்சியினரின் செயல்பாடு கண்டிக்கத்தக்கது என்று தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து, ஏற்பட்ட அமளி காரணமாக அவை முதலில் நண்பகல் 12 மணிவரை ஒத்திவைக்கப்படுவதாக திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்தார்.

மீண்டும் அவை கூடியபோது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால், மாநிலங்களவை நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

<<<<<<>>>>>

ரயில்வே சட்டத்திருத்த மசோதா மக்களவையில் இன்று குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.

ரயில்வே வாரியத்தின் சுயாட்சி, மற்றும் அதன் செயல்பாடுகள் மேம்படுத்தப்படுவதை இம்மசோதா வலியுறுத்துகிறது.

இம்மசோதா மீதான விவாதத்தின்போது பதிலளித்த ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், கடந்த பத்தாண்டுகளில் ரயில்வே உட்கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தார்.

அத்துறையின் சட்ட கட்டமைப்பை எளிதாக்கும் வகையில், இந்த திருத்த மசோதா கொண்டுவரப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

ஏழை மற்றும் நடுத்தர வகுப்பினர் குறைவான கட்டணத்தில் பயணம் மேற்கொள்ளும் வகையில் நமோ பாரத் உள்ளிட்ட பல்வேறு ரயில்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த பத்தாண்டுகளில் 44 ஆயிரம் கிலோமீட்டர் ரயில் வழித்தடங்கள் மின்மயமாக்கப்பட்டிருப்பதாக திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

மேலும், ரயில்வேத்துறையை தனியார்மயமாக்கும் திட்டம் ஏதும் இல்லை என்றும், பாதுகாப்பான பயணத்தை உறுதிபடுத்தும் வகையில் சீரமைப்பு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

படுக்கை வசதிகொண்ட வந்தேபாரத் ரயில்கள் விரைவில் செயல்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என்று கேள்விநேரத்தின்போது திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

தற்போது இந்த வசதியுடன் பத்து வந்தேபாரத் ரயில்கள் தயாரிப்பில் இருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>

போலியான செய்திகள் பரப்பப்படுவதை தடுக்கும் வகையில் தகவல் சரிபார்ப்பு பிரிவு தீவிரமாக செயலாற்றி வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், மக்களவையில் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில், பத்திரிகை தகவல் அலுவலகத்தின்கீழ் செயல்பட்டுவரும் இப்பிரிவானது,

மத்திய அமைச்சகங்கள் வெளியிடும் செய்திக்குறிப்புகளின் அடிப்படையில் சரியான தகவல்களை மக்களுக்கு கிடைக்க செய்வதாக தெரிவித்துள்ளார்.

மேலும், சமூக வலைதளங்களில், மகளிர் மற்றும் குழந்தைகளை தவறாக சித்தரித்து பரவும் தகவல்களை தடுக்கும் வகையில், இணைய குற்ற தடுப்புப்பிரிவுமத்திய உள்துறையின்கீழ் செயல்பட்டு வருவதாகவும் அந்த பதிலில் திரு எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

மரபுசாரா எரிசக்தி திறனை அதிகரிக்கும் வகையில், பல்வேறு முயற்சிகளை அரசு செயல்படுத்தி வருவதாக மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை இணையமைச்சர் திரு ஸ்ரீபத் யசோநாயக் தெரிவித்துள்ளார்.

மக்களவையில், அவர் அளித்துள்ள பதிலில், நாட்டின் மொத்த மின் உற்பத்தித்திறனில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை 46 புள்ளி ஐந்து சதவீத பங்களிப்பினை தந்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பத்தாண்டுகளுக்குமுன்பு புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறையில், 76 புள்ளி மூன்று எட்டு ஜிகாவாட் மின்சாரம் கிடைத்ததாகவும், தற்போது 203 ஜிகாவாட் பெறப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

மகாகவி சுப்பிரமணிய பாரதியின் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான தொலைநோக்கு பார்வை இன்றளவும் அனைவருக்கும் உந்துசக்தியாக உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மகாகவி பாரதியாரின் பிறந்த தினத்தை முன்னிட்டு, இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அன்னாரது படைப்புகளின் தொகுப்பை வெளியிட்டு அவர் பேசினார்.

அடுத்துவரும் தலைமுறையினரையும் ஊக்குவிக்கும் வகையில் அவரது படைப்புகள் உள்ளதாக பிரதமர் புகழாரம் சூட்டினார்.

<<<<<<>>>>>

ரிசர்வ் வங்கியின் 26-ஆவது கவர்னராக திரு சஞ்சய் மல்ஹோத்ரா இன்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

இதையடுத்து, செய்தியாளர்களிடம் பேசிய அவர், உலகளாவிய பொருளாதார, அரசியல் சூழலுக்கு ஏற்ப ரிசர்வ் வங்கி எச்சரிக்கையுடன் செயல்பட்டு வருவதாக கூறினார்.

நிதித்துறையில் புதிய தொழில்நுட்பங்களின் பயன்பாடு முக்கியத்துவம் அளிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

உலக அளவில் நிதிச்செயல்பாட்டில் நிலைத்தன்மையை ஏற்படுத்துவது வேசியம் என்று திரு சஞ்சய் மல்ஹோத்ரா வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>

சிரியாவில் இயல்பு நிலை திரும்பி வருவதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

அந்நாட்டின் இடைக்கால பிரதமராக பொறுப்பேற்றுள்ள முகமது அல் பஷீர், வெளிநாடுகளில் வசிக்கும் சிரிய நாட்டவர்களை மீண்டும் அழைத்து வருவதற்கு தமது அரசு முன்னுரிமை அளிக்கும் என்று கூறியுள்ளார்.

ஏற்கனவே பசார் அல் ஆஸாத்தின், ஆட்சியில் அங்கம் வகித்த அதிகாரிகளுடன் இணைந்து, அரசுத்துறைகளையும், நிறுவனங்களையும் புனரமைக்க இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, கடந்த இரண்டு நாட்களாக சிரியாவை குறிவைத்து கடல் மற்றும் வான்வழி வாயிலாக இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருவதாக அந்நாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

**<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

ஒடிஷா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tasnim Mir** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-11, 21-5 என்ற செட் கணக்கில் இத்தாலியின் **Gianna Stiglich** –ஐ வென்றார்.

**Shreya Lele, Ira Sharma, Anmol Kharb** ஆகியோர் மகளிர் ஒற்றையர் பிரிவிலும், **Rutuparna Panda – Swetaparna Panda** இணை மகளிர் இரட்டையர் பிரிவிலும், சதீஷ்குமார் கருணாகரன் -- **Aadya Variyath** இணையும், சாத்விக் ரெட்டி – வைஷ்ணவி இணையும் கலப்பு இரட்டையர் பிரிவுகளில் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

------------

உலக ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<<<END>>>>>>**